CFM|16|10 (10)

# டெங்கு காய்ச்சல்

தென் இலங்கையில் மிக வேகமாக பரவிவரும் டெங்கு காய்ச்சல் தற்போது யாழ்ப்பாணத்திலும் பரவ ஆரம்பித்துள்ளது. அண்மையில் குருநகரைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் குருதிப்பெருக்குடன் கூடிய டெங்கு காய்ச்சல் அறிகுறிகளுடன் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது நாங்கள் அறிந்ததே.

## எனவே நாங்கள் அறிந்திருக்கவேண்டியவை

- டெங்கு காய்ச்சல் வைரஸ் கிருமியால் ஏற்படும் நோய்
- இவ் வைரஸை ஈடிஸ் இன நுளம்பு பரப்புகிறது
- இந் நுளம்பு சாதாரணமாக பகலில் ( காலை 6 – 8மணி மாலை 4 – 7 மணி) மனிதரைக் கடிக்கும். நுளம்பு நோயுள்ள ஒருவரை கடித்து குருதியை உறிஞ்சும் போது வைரஸ் கிருமியை உள்ளெடுத்து, பின் சுகதேகி ஒருவரைக் கடிக்கும் போது டெங்கு வைரஸை ஏற்றி நோயைப் பரப்புகிறது.

## நோயின் பொதுவான அறிகுறிகள்

- காய்ச்சல்
- கடுமையான தலையிடி
- கண்ணிற்குப்பின்னால் நோ
- தசைநார் மூட்டுக்களில் நோஉடலில் பல இடங்களில்.தோலில் கீழ் சிவந்த புள்ளிகள்

## சில வேளைகளில்,பாரிய அறிகுறிகள்

- மூக்கால் குருதி வெளியேறல்
- முரசால் குருதி வெளியேறல்
- குடல் மூலம் குருதி வெளியேறல்
- சிறுநீர் மலம் மூலம் குருதி வெளியேறல்
- மாதவிடாயின் போது கூடுதலாக குருதி வெளியேறல்

**இந்நிலை குருதிப்பெருக்குடன் கூடிய டெங்கு காய்ச்சலாக கருதப்படும்**

## தொடர்ந்து

காய்ச்சல் 3–7 நாட்கள்பின் குறைந்து விடலாம் எனினும் நோயாளியில் பின்வருவன காணப்படலாம்.

- மேல் குளிருதல்
- வாயைச்சுற்றி நீலநிறமாதல்
- பதகளிப்பும் குழப்பமான நிலையும் ஏற்படல்
- நாடித்துடிப்பு வீதம், குருதியமுக்கம் குறைதல்

இந்நிலை டெங்கு அதிர்ச்சி நிலைஎனப்படும் இந்நிலையில் தீவிரமருத்துவ சிகிச்சை அளிக்கப்படாவிடில், 12– 24 மணித்தியாலத்துள் நோயாளி இறக்கும் அபாயம் உண்டு

## தடுப்புமுறைகள்

### நுளம்புக் கட்டுப்பாடு

நுளம்புகள் நன்னீரில் முட்டைகளை இடுகின்றன. ஆகவே பின்வரும் நீர் தேங்கும் இடங்களில் நீர் தேங்காதவாறு முறையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் (நீர் தேங்கி நிற்பதைத் தவிர்க்க முடியாவிடில் பாவித்த என்ஜின் ஒயில் போன்றவற்றை நீர்ப்பரப்பில் தெளிக்கலாம்)

- நீர் தேங்கும் சிறு குட்டைகள்
- மூடப்படாது நீர் சேகரிக்கும் இடங்கள்
- வீட்டிற்கு வெளியே வீசப்பட்டுள்ள
  - பாத்திரங்கள்
  - ரின்கள்
  - பானைகள்/சட்டிகள்
  - சிரட்டைகள் / கோம்பைகள்
  - ரயர்கள் போன்றவை
- நீருள்ள பூச்சாடிகள்
- மழை நீர் தேங்கியுள்ள தாழ்வார பீலிகள்
- மேசையில் எறும்புகள் வராது மேசைக் கால்களுக்கு வைக்கப்படும் நீருள்ள பாத்திரங்கள்
- கைவிடப்பட்ட பாவனையற்ற கிணறுகள்
- நீர்நிறைந்த மரப்பொந்துகள்
- **மேலும் பின்வரும் நடவடிக்கைகள்**
  - இருண்ட பற்றைகளில் நுளம்புகள் தங்குவதாலும் பறக்கும் தூரம் மிக்குறுகியதாலும் வீடுகளிலிருந்து 500 மீற்றர் சுற்றளவில் பற்றைகளை அழித்தல்
  - குப்பைகூளங்களை புதைத்தல் அல்லது எரித்தல்
  - ஆட்களற்ற அயல் வீடுகள், வெற்றுக்காணிகள் துப்பரவு செய்தல்

## ★ தனிநபர் பாதுகாப்பு

- ✓ நுளம்புவலை, நுளம்புசுருள், புல்எண்ணெய் பாவித்தல்
- ✓ வீடுகளின் யன்னல், கதவுகளுக்கு நுளம்புகள் புக முடியாதவாறு வலைஅடித்தல்
- ✓ நுளம்பு பற்றைகளில் தங்குவதாலும் இதனுடைய கடிக்கும் நேரம் காலை 6–8 மணி ,மாலை 4–7மணி என்பதாலும் இந்நேரங்களில் வெளியில் நிற்பதை முடிந்தளவுக்கு தவிர்த்துக்கொள்ளுங்கள்
- ✓ நீளமான உடைகள் , காலுறைகளை அணிதல்

## ★ நோயாளி பராமரிப்பு

- ✓ மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய உதவியை நாடுதல்
- ✓ நோயாளிக்கு பூரண ஓய்வு கொடுத்தல்
- ✓ நோயாளியை தனிமைப்படுத்தல்
- ✓ இலகுவில் சமிபாடடையும் போசாக்கான உணவு கொடுத்தல் (முட்டை,பால் இட்டலி போன்ற இலகுவில் சமிபாடடையும் உணவுகள்)
- ✓ வைத்திய ஆலோசனையின்றி மருந்துகள் எடுப்பதைத் தவிர்த்தல் (உதாரணமாக டிஸ்பிரின், அஸ்பிறின் போன்றவை குருதிப்பெருக்கை அதிகமாக்கும்)

**தகவல்:** *சுகாதாரக்கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு*
*சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம்.*
*யாழ். பல்கலைக்கழகம் 05.12.2000*

வெளியீடு:
**மக்கள் நலன்புரிச்சங்கமும்**
**முதலுதவிப் படையணியும்**
சுகாதாரப்பிரிவு
ஆடியபாதம் வீதி கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

**Printed By : GANESAN COMMUNICATIONS, Kokuvil**